# மாவட்ட இயக்க மேலாண்மை அலகு / தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,தருமபுரி

## பத்திரிக்கை செய்தி

**ந.க.எண்.428/2026/அ1** **நாள்: .02.2026**

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.86/A2/2026 நாள்.04.02.2026-ன்படி தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டத்தின் கீழ் வட்டார இயக்க மேலாண்மை அலகு அலுவலகங்களில் காலியாக உள்ள வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களை நிரப்பிட அறிவுரைகள் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து தருமபுரி மாவட்டத்தில் மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் கீழ் வட்டார இயக்க மேலாண்மை அலகுகளில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் தேர்வு செய்யும் பொருட்டு (Purely Engaged on contract Basis) தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**காலிப்பணியிட விவரம்**

| வ. எண் | மாவட்டம் | வட்டாரம் | பதவியின் பெயர் | காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | தருமபுரி | தருமபுரி | வட்டார ஒருங்கிணைப்பாளர் (ஒப்பந்த அடிப்படையில்) | 1 |
| | | நல்லம்பள்ளி | | 1 |
| | | அரூர் | | 1 |
| | | காரிமங்கலம் | | 1 |
| | | பாலக்கோடு | | 1 |
| | | பென்னாகரம் | | 1 |
| | | ஏரியூர் | | 1 |
| | | | **மொத்தம்** | 7 |

**1.கல்வி தகுதி :**

- பட்டதாரியாக(Graduate in any Discipline) இருக்க வேண்டும் மற்றும் MS Office-ல் குறைந்த பட்சம் 3 மாத பயிற்சி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் அல்லது கணினி அறிவியல் (அ) கணினி பயன்பாடுகள் (Graduate in Computer Science (or) Computer Applications) துறையில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

**2. வயது :**

30 வயதிற்குள் இருக்க வேண்டும்.

**3.அனுபவம் :**

சுயஉதவிக்குழுக்கள் (SHG) / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் (PLF) இல் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**4.குடியிருப்பு :**

விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் காலிப்பணியிடம் உள்ள வட்டாரத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

**5.நிபந்தனைகள்:**

- இருசக்கர வாகன உரிமம் வைத்திருக்க வேண்டும்.
- சிறந்த தகவல் தொடர்பு திறன் மற்றும் பணி திறமை வேண்டும்.
- TNSRLM, புதுவாழ்வு திட்டம், IFAD திட்டம் அல்லது வேறு எந்த மாநில அரசு திட்டங்களில் நிர்வாக அல்லது நிதி முறைகேடுகள் காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர் / நீக்கப்பட்டவராக இருக்க கூடாது.

**6.தேர்வு செய்யும் நடைமுறை (Procedure for Selection):**

விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதி பெற்ற (Shortlised) விண்ணப்பதாரர்கள் மாவட்ட தேர்வு குழுவினரால் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டு தேர்வு குழுவினரால் நேர்முகத் தேர்வு நடத்தி தேர்வு செய்யப்படுவர்.

நேர்முகத் தேர்வின் பொழுது கீழ்கண்ட விவரங்களை அடிப்படையாக கொண்டு 50 மதிப்பெண்கள் (Weightage Matrix )நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

- Weightage shall be given to post graduate and above
- Minimum 5 year's experience in SHG / Similar projects
- Minimum 5 year Left over service
- Basic computer competency (need certificate of being trained in basic computer operations)
- CIBIL Scores & other relevant financial scores.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

திட்ட இயக்குநர்/இணை இயக்குநர்,
மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,
முதல் தளம், பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிடம்,
தருமபுரி-636705.

**மதிப்பெண்கள் (Weightage Matrix )**

| Educational Qualification | Experience | Left over service | Computer Skills | Financial Integrity | Interview – Scheme Knowledge | Soft Skills | Total |
|---|---|---|---|---|---|---|---|
| 5 Marks | 10 Marks | 10 Marks | 5 Marks | 5 Marks | 10 Marks | 5 Marks | 50Marks |

- இறுதியாக நேர்முகத் தேர்வு 50 மதிப்பெண்களுக்கு நடத்தப்படும்.
- தரவரிசைப் பட்டியலுக்கான (Merit List) குறைந்தபட்ச தகுதி மதிப்பெண் 60% (அதாவது 60 மதிப்பெண்கள்)
- முதுநிலை பட்டம் (Post Graduate) மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வித் தகுதிக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- நேர்முகத் தேர்வின் அடிப்படையிலேயே வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் தேர்வு செய்யப்படும்.
- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட வட்டாரங்களில் செயல்படும் வட்டார இயக்க மேலாண்மை அலகு அலுவலகங்களில் சமர்ப்பிக்க வேண்டியது.
- மேலும், காலிப்பணியிடங்கள் நிரப்புவது தொடர்பான சந்தேகங்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு தருமபுரி மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, அலுவலக தொலைபேசி எண்.04342-233298-ஐ அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | தேர்வு நடைமுறை | நாள் |
|---|---|---|
| 1 | விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் | 16.02.2026 |
| 2 | விண்ணப்பம் பரிசீலனை நாள் | 18.02.2026 |
| 3 | நேர்முக தேர்வு நடைபெறும் நாள் | 20.02.2026 |
| 4 | நியமன ஆணை வழங்கும் நாள் | 23.02.2026 |

**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**தருமபுரி**